SECONDARY SCHOOL

END - OF - YEAR EXAMINATION - 2017

SECONDARY 3 EXPRESS / 3N(A)

TAMIL LANGUAGE

PAPER 2

**1hr 30 mins**
**(10.20am - 11.50am)**

---

குறிப்புகள் :

1. ஒவ்வொரு வினாத் தொகுதியின் தொடக்கத்திலுள்ள குறிப்புகளைப் படித்துப் புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளிலேயே எழுத வேண்டும்.

பெயர் : ______

வகுப்பு : ______ ______

மதிப்பெண்கள் : /70

---

இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள வினாக்கள் பக்கம் 2 முதல் 9 வரை அச்சிடப் பட்டுள்ளன. கடைசி வினாவின் கீழ் 'முற்றும்' என்னும் சொல் காணப்படும்.

---

**SECONDARY 3**
**SET 15 /15**

SECONDARY 3
EXPRESS

More papers at www.testpapersfree.com

A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q1. உணவுத் தட்டுப்பாட்டினால் பாதிப்புற்ற சிறுவர்கள் ____________ காணப்பட்ட காட்சிகள் செய்தித்தாளில் வெளிவந்தன.

Q2. தீய எண்ணங்களுக்கு ____________ நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொண்டால் நாம் வாழ்க்கையில் சாதிக்கலாம்.

Q3. ஒவ்வொரு நாளும் கேளிக்கை விடுதியில் தன் பணத்தை ____________ பாலனை அவனது பெற்றோர்கள் கண்டித்தனர்.

Q4. நீண்ட நேரம் தொலைக்காட்சி பார்த்துவிட்டுத் தூங்கிய முத்து மறுநாள் ____________ எழுந்து பள்ளிக்கு விரைந்தான்.

Q5. சிறுவர்கள் சிலர் தங்களுக்கு வேண்டிய பொருள்களை ____________ தங்கள் பெற்றோர்களிடமிருந்து வாங்கிக் கொள்வார்கள்.

(1) ஒத்துப் பாடாமல்
(2) அறக்கப் பறக்க
(3) ஒப்பு உயர்வற்று
(4) கக்க வைத்த
(5) ஒரு காலில் நின்று
(6) இடங்கொடுக்காமல்
(7) எடுத்த எடுப்பில்
(8) ஓடியாடிப் பார்த்து
(9) ஒட்டி உலர்ந்து
(10) அள்ளியிறைத்த

(அடுத்த பக்கம் பார்க்க)



More papers at www.testpapersfree.com

A2. வாக்கியங்களை முடித்தெழுதுக. (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்திய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும். உமது விடைகளை மட்டும் எழுதுக.

Q6. செவ்வாய் மண்டலம் இரத்தத்தைப் போல் சிவப்பாகத் தோன்றுவதால் அது செவ்வாய் என்று பெயரிடப்பட்டது.

'செவ்வாய்' என்று பெயரிடப்பட்டதற்கு ------------------------------

------------------------------------------------------------

Q7. கிராமியக் கலைகள் ஒரு சமுதாயத்தின் நிலைக்கண்ணாடியாக விளங்குகின்றன.

ஒரு சமுதாயத்தின் நிலைக்கண்ணாடியாக ------------------------------

------------------------------------------------------------

Q8. மலைப் பிரதேசங்களில் வாழ்ந்துவந்த ஆண்களே ஆரம்பகாலத்தில் மயிலாட்டத்தை ஆடினார்கள்.

ஆரம்பத்தில் மலைப் பிரதேசங்களில் வாழ்ந்த பெண்கள் ------------------------------

------------------------------------------------------------

Q9. சிங்கப்பூரில் பல இன மக்கள் திருவிழாக்களை ஒற்றுமையாகக் கொண்டாடுகின்றனர்.

திருவிழாக்கள் பலஇன மக்களால் ------------------------------

------------------------------------------------------------

Q10. கட்டொழுங்கு ஒருவனுக்குத் தன்னம்பிக்கை, பொறுப்புணர்ச்சி ஆகியவற்றை உண்டாக்குகிறது.

ஒருவனுக்குத் தன்னம்பிக்கை, பொறுப்புணர்ச்சி

------------------------------------------------------------

------------------------------------------------------------



More papers at www.testpapersfree.com

பயிற்சி 1

"ஆ" பிரிவு

B3 அமைப்புச் சொற்கள் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச் சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் எழுதுக.

'மனோசக்தி' என்பது ஒவ்வொரு மனிதனின் வாழ்வுக்குமே இன்றியமையாத மூலசக்தியாகும். மனமும் மனோசக்தியும் இல்லாவிட்டால் ------Q11-------- என்னும் உயிருக்கு இவ்வுலகில் இயக்கம் இல்லை; வாழ்வில்லை; உயர்ச்சியுமில்லை.

மனத்திலேதான் எண்ணம் எழுகின்றது. எண்ணமே செயலைத் தூண்டுகின்றது. சாதகமானதென்றால் செயற்படுத்த வேண்டிய ஊக்கத்தையும் திட்டங்களையும் மனமே வகுத்துத் தருகின்றது. நமது ஒவ்வொரு ------Q12-------- இப்படி மனத்திலே உருவாகிப் புறத்தில் நடக்கிறது. மனம் இல்லாமல் சிந்தனை, செயல், இயக்கம் எதுவுமே இல்லை.

இப்படி எல்லாவற்றிற்கும் மூலமாக இருக்கும் மனம் ------Q13-------- இருக்க வேண்டாமா? தெளிவாக இருக்க வேண்டாமா? முழுச் சக்தியுடன் திகழ வேண்டாமா? அப்போதுதானே நம்முடைய சொல்லும் செயலும் வாழ்வும் சக்தி படைத்தவை ஆகும். நாமும் சக்தி படைத்தவர் ஆவோம். புகழுக்கும் உயர்வுக்கும் வலிமைக்கும் உரியவர்களாகி ------Q14-------- வாழ்வைப் பெறுவோம்.

அறிவைப் பற்றிய ஆராய்ச்சியிலே தமிழ் அறிஞர்கள் எல்லாக் காலத்திலும் ஈடுபட்டிருக்கின்றார்கள். இலக்கணம் வகுத்தவர் தொல்காப்பியர். அவர் உயிர்களை அறிவின் தகுதியை வைத்தே வகுத்துக் காட்டுகின்றார். ஓரறிவு முதலாக ஐந்து அறிவு வரையில் எல்லாமே அடங்கிவிடுகின்றன. இந்த அறிவுகளுக்கு மூலமாக, கருவியாக இருப்பவை மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளாகும். இவற்றால் உணரப்படுவனவே ஐவகை அறிவுகள் என்பன. இவற்றைக் கடந்து -------Q15-------- ஆறாவது அறிவு. அதுதான் பகுத்தறிவு. அந்த அறிவுதான் மனோசக்தியின் நிலைக்களன்; தொழிற்களன்; ஊற்றுக்களன்.

| | |
|---|---|
| 1. மனிதன் | 6. நடத்தையும் |
| 2. அமைந்துள்ளது | 7. ஒலி |
| 3. செயலும் | 8. மக்கள் |
| 4. எண்ணமே | 9. மனமே |
| 5. உயர் | 10. வலிமையாக |



More papers at www.testpapersfree.com

தேர்வு
3 விரைவு

## "ஆ" பிரிவு

B4 தெரிவுவிடைக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு விடை தருக.

வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதவும்.

பகுதி 1

உழைப்புதான் ஒருவனுக்குத் தான் விரும்பிய அனைத்தையும் கொடுக்கும். உழைப்பில்லாத ஒருவனால் தன் அறிவையும் திறமையையும் வளர்த்துக் கொள்ள முடியாது. அதிர்ஷ்டம் ஒரு நாள் வந்து தன்னை அணைத்துக் கொள்வதாக வெறும் கனவு மட்டும் கண்டு உழைக்கத் தவறியவன் வாழ்க்கையில் கண்டிப்பாக முன்னேற மாட்டான். மேலும் உழைக்காமல் சோம்பேறித்தனமாக வாழ்பவர்களுக்கு யாராலும் உதவ முடியாது. இவர்கள் வாழ்நாள் முழுவதும் வேதனையை மட்டுமே அனுபவிக்க வேண்டியிருக்கும்.

பயனற்ற பல காரியங்களைச் செய்வதற்காக சிலர் தங்கள் உழைப்பை வீணடித்து விடுகிறார்கள். அதே சமயம், உழைப்பைத் தன்னலத்திற்காக மட்டும் பயன்படுத்தினாலும் வளமாக இருக்க வேண்டிய எதிர்காலத்தை நாம் இழந்து விடக்கூடும்.

ஒருவன் தான் எடுத்துக் கொண்ட முயற்சியில் தோல்வியைக் கண்டால், வெற்றியை அடைவதற்கு அவனுடைய உழைப்பு போதவில்லை என்பதையே அது எடுத்துக் காட்டுகிறது. மாறாக, அவன் போதுமான அளவில் தன் உழைப்பை அதிகரித்தால் அவனுடைய தோல்வியும் வெற்றியாக மாறிவிடும். உண்மையாகப் பாடுபட்டு உழைப்பவன் வெற்றி, புகழ், பதவி, வசதி நிறைந்த வாழ்க்கை போன்றவற்றைப் பெறுவான். சுயநலம் கலக்காமல் சமூக மேன்மைக்காக ஒருவன் செய்யும் உழைப்பு மிகவும் புனிதமானது.



More papers at www.testpapersfree.com

தேர்வு
3 விரைவு
<u>வினாக்கள்</u>

Q16 ஒருவன் எதற்காக உழைக்க வேண்டும்?

(1) விரும்பிய அனைத்தையும் கொடுப்பதற்காக
(2) அறிவையும் திறனையும் வளர்த்துக் கொள்வதற்காக
(3) அதிர்ஷ்டத்தை அணைத்துக் கொள்வதற்காக
(4) கனவு கண்டு வாழ்வதற்காக

Q17 எப்போது வருங்காலம் நமக்கு இல்லாமல் போய்விடுகிறது?

(1) பயனற்ற காரியங்களைச் செய்யும்போது
(2) சோம்பேறித்தனமாக வாழும்போது
(3) உழைப்பு வீணாகும்போது
(4) சுயநல நோக்கத்தோடு உழைக்கும்போது

Q18 தோல்வியை வெற்றியாக்க எத்தகைய முயற்சி தேவை?

(1) உண்மையாக உழைக்க வேண்டும்
(2) அதிகமாக உழைக்க வேண்டும்
(3) முயற்சியோடு உழைக்க வேண்டும்
(4) தன்னலத்தோடு உழைக்க வேண்டும்



More papers at www.testpapersfree.com

தேர்வு
3 விரைவு
<u>பகுதி 2</u>

நாம் எதையும் காது கொடுத்துக் கேட்கவேண்டும். 'கற்றலின் கேட்டலே நன்று', என்பது பழமொழி. ஒரு தகவலைப் பிறர்சொல்லி அதை நாம் காதால் கேட்கும்போது அந்தத் தகவல் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடும். இன்றைய இளைஞர்களுக்குக் குறிப்பாகப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிலும் இளைய தலைமுறையினருக்குத் தேவையானது இவ்வாற்றலே ஆகும். "ஒரு தகவலைக் காதுகொடுத்துக் கேட்பது என்பது அவ்வளவு முக்கியமானதா?" என்று சிலர் கேட்கலாம். ஆம், நிச்சயமாக அது முக்கியமானதுதான். ஒரு தகவலை நாம் சரியாக, முழுமையாகக் கேட்கவில்லை என்றால் அந்தத் தகவலால் நமக்கு எந்தப் பலனும் ஏற்படுவதில்லை.

ஒரு தகவலை நாம் கேட்கிறோம். ஆனால், அதை முழுமையாகப் புரிந்து கொள்கிறோமா? என்பதுதான் முக்கியம். கவனக்குறைவாக ஒரு தகவலைக் கேட்கும்போது பல பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. நண்பர் ஒருவரைப் பற்றியோ உறவினரைப் பற்றியோ பிறர் பேசும்போது அதைச் சரியான முறையில் கேட்டுப் புரிந்துகொள்ளவில்லை என்றால் அவரைப் பற்றித் தவறாக நினைக்கும் நிலை வரலாம். வியாபாரம் செய்யும் ஒருவர் தன் வாடிக்கையாளரின் பேச்சுகளையும் கோரிக்கைகளையும் கவனமாகக் காதுகொடுத்துக் கேட்க வேண்டும். இல்லையேல் வாடிக்கையாளர் எரிச்சல் அடைந்து வேறு கடைக்குச் செல்லும் நிலை உருவாகும். அந்த வாடிக்கையாளர் மற்றவர்களிடம் சென்று அந்த வியாபாரியின் கவனக்குறைவு பற்றிச் சொல்ல நேரிடும். இதனால் அந்த வியாபாரி தனக்குக் கிடைக்கக்கூடிய வாடிக்கையாளர்களை இழந்துவிடக்கூடும்.

<u>வினாக்கள்</u>

Q19 இளைஞர்களிடம் எதிர்பார்க்கப்படும் முக்கியமான பண்பு யாது?

(1) கற்பதைவிடக் கேட்பது நல்லது என உணர்வது
(2) எதையும் மனத்தில் ஆழமாகப் பதியவைப்பது
(3) பிறர் பேச்சைக் கவனமாகக் கேட்பது
(4) தகவல்கள் முக்கியமானவை என அறிவது

Q20 வாடிக்கையாளர்களை இழக்கும் சூழ்நிலை ஏன் உருவாகிறது?

(1) வாடிக்கையாளர்களின் தேவைகளைக் கவனமாகக் கேட்காததால்
(2) கடைக்காரரின் கவனக்குறைவைப் பிறர் தெரிந்துகொள்வதால்
(3) வாடிக்கையாளர்கள் வேறு நிறுவனத்தை விரும்புவதால்
(4) வாடிக்கையாளர்கள் எரிச்சல் கொள்வதால்



More papers at www.testpapersfree.com

பிரிவு

15. சுயவிடைக் கருத்தறிதல் (25 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியிற் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை தருக.

வாழ்வுக்கு இன்றியமையாதது நட்பாகும். நண்பர்களோடு பழகுவது, பேசுவது, வாழ்வது எவர்க்கும் மகிழ்ச்சியை அளிக்கும் என்று அறிஞர்கள் கூறுவதுண்டு. மற்றவர்களோடு நட்பு கொள்ளும்முன்பு அவரைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள வேண்டும் அல்லது நாம் கூறுவதையெல்லாம் அவர் ஏற்றுக்கொள்ளமாட்டார், நம்முடைய கொள்கைகளையும் அவர் பின்பற்ற மாட்டார் என்ற முடிவில்தான் எவரோடும் நட்பு கொள்ளவேண்டும். இல்லையென்றால் அந்நட்பு நிலைக்காது. ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால், அதிலிருக்கும் பத்துப் பேர்களுக்கும் கண், காது, மூக்கு, வாய்கள் இருக்கின்றன. ஆனால் அவையனைத்தும் ஒருவர்க்கு இருப்பது போல் மற்றவர்க்கு இருப்பதில்லை. அதே போலத்தான் மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மைகள் கொண்டு விளங்குபவர்கள். ஒவ்வொருவருடைய குணமும் வேறுபடும். இந்த உண்மையை உணர்ந்து நட்பை முடிவு செய்தல் நன்று.

நாம் சிலரோடு நட்பு கொள்ளும் அதே வேளையில், சிலரோடு பகையும் கொள்கிறோம். இந்தப் பகை எவ்வாறு வளர்கிறது? பகைக்கு விதை நட்புதான். நட்பு என்ற விதை இல்லாமல் பகை என்ற செடி முளைப்பதே இல்லை. சாலையில் நாம் ஆயிரம் பேரைச் சந்திக்கிறாம். அவர்களோடு நமக்குப் பகை இல்லை. ஏன்? அவர்கள் எவரோடும் நமக்கு நட்பு இல்லை. நன்கு நினைத்துப் பார்த்தால், நம்மோடு நட்பு வைத்திருப்பவர்களோடுதான் நாம் பகை கொள்கிறோம். ஆகவே பகை என்ற செடி முளைப்பது நட்பு என்ற விதையிலிருந்துதான். நாம் சிலராடு கொள்ளும் நட்பு தொடர்ந்து நீடிக்காது. அது பாதியிலேயே தடைப்பட்டுப் போய்விடும். அதனால் நிலையான நட்பு எதுவென்ற கேள்விக்கு விடை காண வேண்டியுள்ளது.

நட்பு என்ற சொல்லுக்கு வள்ளுவர் அழகாக விளக்கம் அளித்துள்ளார். உடம்புக்கும் உயிருக்கும் இடையே இருக்கும் நட்பைத்தான் நட்பு என்கிறார். உடல் அழிந்து போகும்போது உயிரும் அழிந்து போகிறது. உடம்பில் ஊசி குத்தினால் உயிர் துடியாய்த் துடிக்கிறது. இந்த நெருக்கமான தொடர்பை ஏற்படுத்துவது நிலையான நட்பாகும். ஆதலால் இணைபிரியாமல் இருக்கும் நண்பர்கள் நீடித்த நட்பிற்கு நற்சான்று என்று வள்ளுவர் பறைசாற்றுகிறார். ஆனால் கூண்டை விட்டுப் பறவை பறந்து ஓடி விடுவதைப் போல இந்த உடலை விட்டு உயிரும் ஓடிவிடும் என்று நம்மை எச்சரிக்கிறார். பின் எவருடைய நட்பு நிலைக்கும் என்று நம்மைச் சிந்திக்கத் தூண்டுகிறார் வள்ளுவர்.

More papers at www.testpapersfree.com

SEC 4 EXPRESS
TESTPAPER 11

விடைக்குறிப்பு
உயர்நிலை 4E-5E ஆண்டிறுதித் தேர்வு

Q1. 9 Q2. 3 Q3. 6 Q4. 4 Q5. 8

Q6. ---- உறுதியான உள்ளம் இருக்க வேண்டும் .

Q7. ---- பல இன்னல்களுக்கிடையே அவர்கள் தன்னலமற்று சேவையாற்றியதே ஆகும் .

Q8. ---- அவர் அத்துறையில் சிறந்து விளங்க உதவுகிறது .

Q9. ---- பெருகி , அவன் வாழ்க்கையில் முன்னேற்றம் அடைகிறான் .

Q10. ---- வழி தாய்மார்கள் இன்பம் அடைகிறார்கள் .

Q11. 3 Q12. 7 Q13. 2 Q14. 8 Q15. 5 Q16. 2 Q17. 4 Q18. 3 Q19. 1 Q20. 1

Q21. செய்தித்தாள் , வார மாத இதழ்கள் முதலானவற்றை நடத்துதல் , அவற்றில் செய்தி வெளியிடுதல் போன்றவற்றைச் செய்யும் துறையே இதழியல் துறை எனப்படுவது ஆகும் .

Q22. இதழியல் துறை சமூகத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி , மற்றும் நிகழ்கால வரலாற்றின் பதிவேடு என்பதால் அது இன்றைய வாழ்க்கை முறையை வருங்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளத் துணை செய்கின்றது என்பதாலும் வருங்காலச் தலைமுறையினர் அந்த வாழ்க்கை முறையிலுள்ள குறை நிறைகளைச் சீர்தூக்கிப் பார்த்துத் தங்கள் வாழ்க்கை முறையைச் சீராக அமைத்துக் கொள்ள அவை பெரும்பங்கு வகிக்கின்றன என்பதாலும் அது எதிர்காலத் தலையினருக்கு வழிகாட்டி என்று கூறப்படுகிறது .

Q23. வானொலி , தொலைக்காட்சி போன்ற அறிவியல் சாதனங்கள் மனிதன் விரிந்த அறிவைப் பெற உதவின . உலகின் ஒரு மூலையில் நடக்கும் நிகழ்ச்சியைக் கண்ணிமைக்கும் நேரத்தில் அவை உலகெங்கும் கொண்டு போய்ச் சேர்ப்பதன் வழி , உலகமே இன்று ஒரு கிராமம் போல சுருங்கிக் கொண்டு வருகிறது . மனிதன் கிணற்றுத் தவளையாக இல்லாமல் விரிந்த அறிவைப் பெற இவை இவ்வாறு உதவின .

Q24. மின்சாரம் எப்படிச் சிறந்த ஒரு சேவகனாக இருக்கும் அதே நேரத்தில் கடுமையாகத் தண்டிக்கும் ஒரு முதலாளியாக இருக்கிறதோ அதே போல இதழியல் துறையும் பலவேறு வகைகளில் மக்களுக்குப் பயனபடுவும் சில சமயங்களில் சமூகத்தைப் பாதிக்கும் ஒன்றாகவும் அமைந்துவிடுவது உண்டு . இவ்வாறு இதழியல் துறையை மின்சாரத்துடன் ஒப்பிடுவது பொருந்தும் .

Q25. சமூக விழிப்புணர்வையும் சமூக மாற்றத்தையும் ஏற்படுத்தும் வகையில் அரசு நிலையிலும் சமூக நிலையிலும் ஏற்படும் குறைகளைச் சுட்டிக் காட்டித் திருத்துவதும் திறமைகளைக் கண்டறிந்து பாராட்டி வளர்ப்பதும்தான் உண்மையான எதிர்கட்சிகளின் பங்கு எனக் குறிப்பிடப்படுவன ஆகும் .

Q26. உணவாக

Q27. திகழ்கின்றன

Q28. நிகழும்

Q29. கருவிகள்

Q30. உண்டாக்குவதிலும்

More papers at www.testpapersfree.com

நல்ல நீடித்த நட்பை நாம் பெற வேண்டுமென்றால், விருப்பு வெறுப்பின்றி வாழப் பழகிக்கொள்ள வேண்டும். பின் விருப்பு வெறுப்பற்று வாழ்ந்து கொண்டிருக்கிற ஒருவரது நட்பைப் பெறவேண்டும். அந்த நட்புதான் உயர்ந்து நிலைத்து நிற்கும். தங்களுடைய விருப்பு வெறுப்புகளை ஒருபுறம் வைத்துவிட்டு, மற்றவர்களைப் பற்றிய எண்ணம் கொண்டவர்கள் பொதுநலம் கொண்டவர்கள். அவர்கள் நல்ல நட்பையும் நற்பண்பையும் வழங்கும்

மனிதர்கள்ளவர். அத்தகையோரின் நட்பை ஒருவர் பெற்றுவிட்டால், அவர் <u>மடியும்</u> வரை மகிழ்ச்சியாக வாழலாம்.

(அடுத்த பக்கம் பார்க்க)

<u>வினாக்கள்</u>

Q21 நட்பைப் பற்றி அறிஞர்களின் கூற்று என்ன? (3 மதிப்பெண்கள்)

Q22 நிலைத்த நட்பைப் பெற நாம் என்ன செய்யவேண்டும் (6 மதிப்பெண்கள்)

Q23 ஒவ்வொருவருடைய குணமும் வேறுபட்டது என்பதை கட்டுரையாசிரியர் எவ்வாறு விளக்குகிறார்? (5 மதிப்பெண்கள்)

Q24 வள்ளுவர் உயர்ந்த நட்பை எதனுடன் ஒப்பிடுகிறார்? ஏன்? (5 மதிப்பெண்கள்)

Q25 எவருடன் கொள்ளும் நட்பு நீடித்து நிலைக்கும்? (6 மதிப்பெண்கள்)

**D6. <u>சொற்பொருள்</u> (5 மதிப்பெண்கள்)**

**கீழ்க்காணும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை எழுதுக.**

Q26 நிலைக்காது

Q27 விளங்குபவர்கள்

Q28 முளைப்பது

Q29 பறைசாற்றுகிறார்

Q30 மடியும்

More papers at www.testpapersfree.com

Set 15 - விடைகள்

உணவுத் கட்டுப்பாட்டினால் ……….

Q1. 9 Q2. 6 Q3. 10 Q4. 2 Q5. 5

Q6. . . காரணம் செவ்வாய் மண்டலம் இரத்தத்தைப் போல் சிவப்பாகத் தோன்றுவதாலேயே ஆகும்.

Q7. . . விளங்குவன கிராமியக் கலைகளே ஆகும்.

Q8. . . மயிலாட்டத்தை ஆடவில்லை.

Q9. . . சிங்கப்பூரில் ஒற்றுமையாகக் கொண்டாடப்படுகின்றன.

Q10. . . ஆகியவை உண்டாவதற்குக் காரணம் கட்டொழுங்கே ஆகும்.

Q11. 1 Q12. 3 Q13. 10 Q14. 5 Q15. 2
Q16. 1 Q17. 4 Q18. 2 Q19. 1 Q20. 1

21) நட்பு வாழ்க்கைக்கு மிக முக்கியமானது-நண்பர்களோடு பழகுவது, பேசுவது, வாழ்வது அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதே நட்பைப் பற்றி அறிஞர்களின் கூற்றாகும்.

22) நாம் மற்றவர்களோடு நட்பு கொள்ளுமுன் அவரைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள வேண்டும். மேலும் அவர் நாம் சொல்வதை எல்லாம் ஏற்றுக் கொள்ள மாட்டார் என்பதையும் நம்முடைய கொள்கைகளையும் அவர் பின்பற்ற மாட்டார் என்பதையும் அறிந்து கொண்டு நட்பு கொள்வதன் மூலம் நிலைத்த நட்பைப் பெறலாம்.

23) ஒரு குடும்பத்தை எடுத்துக் கொண்டால் , அதிலிருக்கும் பத்து பேர்களுக்கும் கண், காது , மூக்கு, வாய்கள் இருக்கின்றன. ஆனால் அவை அனைத்தும் ஒருவருக்கு இருப்பது போல் மற்றவர்களுக்கு இருப்பதில்லை. அதைப்போல் மனிதர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மைகள் கொண்டு விளங்குபவர்கள். ஒவ்வொருவருடைய குணமும் வேறுபடும். இதைக்கொண்டே, மனிதர்கள் ஒவ்வொருவருடைய குணமும் வேறுபட்டது என்பதைக் கட்டுரையாசிரியர் விளக்குகிறார்.

24) உடலுக்கும் உயிருக்கும் இடையே இருக்கும் நட்பைத்தான் உயர்ந்த நட்பு என்று வள்ளுவர் கூறுகிறார். உடல் அழிந்து போகும் போது உயிரும் அழிந்து போகிறது. உடம்பில் ஊசி குத்தினால் உயிர் துடியாய்த் துடிக்கிறது. வள்ளுவர் உயர்ந்த நட்பை உடலும் உயிரும் போல் என்றும் இணைபிரியாமல் இருக்க வேண்டும் என்று ஒப்பிட்டுக் கூறுகிறார்.

25) விருப்பு வெறுப்பற்று வாழ்ந்து கொண்டிருக்கிற ஒருவரோடும், தங்களுடைய விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்து விட்டு மற்றவர்களைப் பற்றிய எண்ணமுடைய பொது நலம் கொண்டவர்களோடும் நட்பு கொள்ளும் போது அது நீடித்து நிலைக்கும்.

26) நீடிக்காது 27) திகழ்பவர்கள் 28) தோன்றுவது
29) கூறுகிறார் 30) இறக்கும்

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com